## கூட்டுறவுச் சங்கங்களில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் தானியங்களைச் சேமிக்கும் வகையில் தானிய சேமிப்புக் கிடங்குகள்! கூட்டுறவு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் - ரூ.1 லட்சம் கோடி கடன் வழங்கிட திட்டம்!

## சட்டப் பேரவையில் – கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

**சென்னை, ஜீன் 30-**

**சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், “கூட்டுறவுத் துறை வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு, ஒரு இலட்சம் கோடி ரூபாய் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது” என்பது உள்ளிட்ட ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனின் பதிலுரை வருமாறு:-

தன்மான உணர்வூட்டிய தந்தை பெரியாரை வணங்குகிறேன். இனமான உணர்வைத் தந்த பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். கால்கள் கொப்பளித்தாலும், காட்டாறுகள் குறுக்கிட்டாலும், கடும் சோதனை ஏற்பட்டாலும், துரோகங்கள் துளைத்தெடுத்தாலும், தூக்கு மேடையை காட்டி மிரட்டினாலும், என் பாதை மாறாது. என் பாதை பெரியாரின் பாதை; என் பாதை அண்ணாவின் பாதை; என வீறு நடை போட்டு, ஓய்வறியா உழைப்பால், வியக்க வைக்கும் சொல்லாற்றலால், அதிவேகச் செயலாற்றலால், ஈடில்லா நினைவாற்றலால், சிலிர்க்க வைக்கும் சிந்தனை யாற்றலால், தீட்டிய அளப்பரிய திட்டங்களால், தமிழகத்தை ஒளிமயமாக்கிய எழு ஞாயிறு.

இந்த நூற்றாண்டு மட்டுமல்ல; எந்த நூற்றாண்டிலும் மங்காப் புகழ் பெற்ற ஓவியமாய், காவியமாய் வாழும் முத்தமிழறிஞர் கலைஞரை வணங்குகிறேன். எட்டு முறை வட்டமிட்டாலும், நோட்டமிட்டாலும், road show நடத்தினாலும், ஒரு இடம்கூட வெற்றி பெற முடியவில்லையே என்ற ஏக்கத்தை ஆதிக்க கூட்டணிக்கும், அடிமைக் கூட்டணிக்கும் பரிசாக தந்து, மதம் கொண்ட யானை, சினம் கொண்ட சிங்கத்திடம் தோற்று ஓடும் என்பதை மெய்ப்பித்துக் காட்டி, நாற்பதையும் தமதாக்கி இந்திய துணைக் கண்டமே உற்று நோக்கும் வெற்றியைப் பெற்ற எந்நாளும், எம்மை ஆளும், நானிலம் போற்றும் நம் மாநில முதல்வர். முடியாது என்ற சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நம்பிக்கை விதைகளை நாளும் விதைத்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை முன் நிறுத்தி சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து தெளிந்த நீரோடை போன்ற அமைதியை தாங்கி, அறத்தை நிலைநாட்டி தமிழகத்தை ஏற்றமும், மாற்றமும் அடைய செய்வதற்கு அள்ளும், பகலும் கண்துஞ்சாது அயராது பணியாற்றிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகிறேன். நமது தமிழ் மண் விடுதலைக்காக முரசொலித்து, சங்கொலி எழுப்பி, இந்தக் கூட்டணியைப் பற்றி நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சின்னங்களை வைத்து சொன்னார். நான் அந்த இயக்கங்கள் சம்பந்தப்பட்ட இதழ்களைப்பற்றிச் சொல்லி, நமது தமிழ் மண் விடுதலைக்காக முரசொலித்து, சங்கொலி எழுப்பி, தீமைகளை தீர்த்துக்கட்டிய தீக்கதிராய் உருவான ஜனசக்தி கூட்டணி வெற்றி பெற உழைத்திட்ட எங்களின் எதிர்காலம், இளைஞர்களின் நல்வழியாய், நம்பிக்கை ஒளியாய், திராவிடத்தின் மீட்சியாய், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிருப்பாய் திகழும் எங்களின் சின்னவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை பெற்றெடுத்த என் தாய், தந்தையை வணங்குகிறேன். என்னை நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கிய சிவகங்கை மாவட்ட திருப்பத்தூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், இயக்க நண்பர்களுக்கும், கூட்டணி தோழர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை, இதையெல்லாம் செய்ய முடியும் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லி நிறைவேற்றினால், அதன் பெயர் வாக்குறுதி. எதை செய்யவே முடியாதென்று இருந்ததையெல்லாம் சொல்லாமல் செய்து காட்டினால் அதன் பெயர் மன உறுதி. மன உறுதி என்பதற்கு மாற்று பெயர் உண்டு என்று சொன்னால், அது நம் தமிழ்நாடு முதலமைச்சரின் பெயராகத்தான் இருக்க முடியும்.

### திராவிடக் கொள்கை!

திராவிடக் கொள்கையை தரணி போற்றும் வகையில் திட்டங்களை தந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த அரசியல் இலக்கணத்தின்படி, எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டை ஏற்றம் பெற செய்துவிட்டார் நமது முதலமைச்சர்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள் மிக நீண்ட வரலாற்றையும், சிறந்த பாரம்பரியத்தையும் கொண்டதாக திகழ்கிறது. 1904ல் திருவள்ளூர் மாவட்டம், திரூரில் ஆரம்பிக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் கடன் சங்கம் தான் இந்தியாவில் முதல் கூட்டுறவுச் சங்கம் ஆகும். அதே ஆண்டு திருவல்லிக்கேணியில் நகர கூட்டுறவு கடன் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

எனவே, இந்தியாவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தாய்மடி தமிழ்நாடு என்று சொன்னால் அது மிகையாகாது. கூட்டுறவுத் துறை தமிழ்நாட்டில் உள்ள 2.29 கோடி குடும்பங்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கும், அனைத்து பிரிவினர்களுக்குமான பொருளாதார சேவைகளை வழங்கும் துறையாக கூட்டுறவுத் துறை விளங்குகிறது.

தமிழ்நாட்டில் 1904ல் ஆரம்பித்த கூட்டுறவு இயக்கம் மூதறிஞர் இராஜாஜி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் போன்ற பெருந்தலைவர்களின் பங்கேற்புடன் படிப்படியாக வளர்ந்து, இன்று ஒரு ஆல விருட்சமாக படர்ந்து செழிப்புற்றுள்ளது.

## கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குறைகளுக்குத் தீர்வு காண ‘பணியாளர் நாள்’ எனும் குறை தீர்வு நாள்!

எப்படி நமது கழகம் தோழமைக் கட்சிகளுடன் ஒன்றிணைந்து ஆதிக்கம் செலுத்துபவர்களையும் அடக்கி, அடிமையாக இருந்தவர்களையும் அப்புறப்படுத்தி அடிப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறதோ, அதேபோலத் தான் நமது கூட்டுறவுத் துறையும் தோழமைத் துறைகளுடன் ஒன்றிணைந்து மக்களின் நலனுக்காகச் செயல்படுகிறது. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மீன் வளத் துறை, பால் வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கைத்தறி மற்றும் துணி நூல் துறை, வீட்டு வசதித் துறை உள்ளிட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அந்தந்த துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் விவசாய பெருங்குடி மக்கள், மீனவர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாலமாகவும், பலமாகவும் இருக்க காரணம் நம் தொலை நோக்குப் பார்வையில் உள்ள தெளிவு மட்டுமே.

இதற்கெல்லாம் காரணம் ‘கூட்டுறவு’ என்ற சரியான கட்டமைப்பை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி, அதற்கான தனித் துறை வடிவமைத்தது நம் கழகம் தான். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், அது கொரோனா, மழை வெள்ளம் போன்ற பேரிடர் காலமாக இருந்தாலும், முன்களப் பணியாளர்கள்போல் இத்துறை செயல்பட்டு பொது மக்களுக்கு திட்டங்களை கொண்டு சேர்க்கிறது.

கொரோனா தொற்றுக் காரணமாக மக்களின் தொடர் இன்னல்களையும், துன்பங்களையும் போக்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் கூட்டுறவுத் துறை மூலமாக அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் 4,000 ரூபாய் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிய வகையில், கூட்டுறவுத் துறை 2021 மே மற்றும் ஜூன் மாதங்களில் 2 கோடியே 8 இலட்சத்து 24 ஆயிரத்து 176 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளில் ஒரு அட்டைக்கு ரூ.4,000 என்ற கொரோனா நிதி நிவாரணத்தை வெற்றிகரமாக வழங்கியது.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கொரோனா நிவாரண நடவடிக்கையாக ஜூன் 2021 முதல் ஜூலை 2021 வரை 2 கோடியே 7 இலட்சத்து 70 ஆயிரத்து 332 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**பொங்கல் பரிசுத் தொகுப்பு**

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் இந்த ஆண்டு (2024) பொங்கல் பண்டிகையின் போது 2 கோடியே 8 இலட்சத்து 11 ஆயிரத்து 842 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும்



குடும்பங்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்புடன் ரூ.1,000/ ரொக்க தொகை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

**பொது விநியோகத் திட்டம்**

பொது விநியோகத்திட்டதின்மூலம் குடிமைப் பொருட்களை வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குடிமைப் பொருட்களை எல்லா காலச் சூழ்நிலைகளிலும் பொது மக்களிடம் தங்குதடையின்றி கொண்டு சேர்க்கும் பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் 34,571 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறைமூலமாக நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் 17,452 கிராமப்புற கடைகள், 7,092 நகர்ப்புற கடைகள் என 24,544 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 9,261 கிராமப்புற கடைகள், 766 நகர்ப்புற கடைகள் என 10,027 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 2,699 நகரும் நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

**வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு பதில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள்**

கூட்டுறவுத் துறையின்மூலமாக உறுப்பினர் ஜி.அசோகன் அவர்கள் குறிப்பிட்டு பேசினார். அதற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, எதிர்காலத்தில் அனைத்து கடைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும் அவசியம் தேவை. கூட்டுறவுத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் 6,463 முழு நேரக் கடைகளும், 820 பகுதி நேரக் கடைகளும் என ஆக மொத்தம் 7,283 நியாய விலைக் கடைகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இதில் 1,784 கடைகளுக்கு முதல்கட்டமாக இப்போது இடங்கள் கண்டறியப்பட்டு, 1,189 கடைகளுக்கு கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக திறக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் விவரம்**

கூட்டுறவுத் துறையின்மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 511 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 997 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் புதிதாக திறக்கப்பட்டிருக்கிறது. இந்த கூட்டுறவு நியாய விலைக் கடைகள் 2.29 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கி வருகின்றன.

மாநிலம் முழுவதிலுமுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் 26,713 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகிறது. அதாவது ஒரு கிராமப் பஞ்சாயத்தில் குறைந்தபட்சம் 2 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு 2 கி.மீ.க்கு மேல் பொதுமக்கள் பயணிக்க வேண்டிய நிலை இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

**4) கூட்டுறவு பண்டகசாலைகள்**

தமிழ்நாட்டில் 45 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின்மூலம் தரமான நுகர்வோர் பொருட்கள் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.1,360/கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது.

தற்பொழுது தனியார் அமைப்புகள் மூலம் பல்வேறு நவீன வசதிகளுடன் விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் அவற்றிற்கு ஈடு கொடுக்கும் வகையில் கூட்டுறவு பண்டகசாலைகளின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு அவற்றிற்கு சவால்விடும் வகையில் மாநிலத்திலுள்ள அனைத்து கூட்டுறவு பண்டகசாலைகளும் தொடர்ந்து 3 வருடங்களாக நிகர இலாபத்தில் செயல்படுகின்றன.

விலையேற்ற காலகட்டத்தில் கூட்டுறவு பண்டகசாலைகளின்மூலம் குறைந்த விலையில் காய்கறிகள், மளிகைப் பொருட்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அண்மையில் வெங்காயம், தக்காளி விலையேற்ற காலகட்டத்தில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு விலையேற்றம் குறைக்கப்பட்டது. இதன்மூலம் பொதுமக்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் கூட்டுறவுத் துறை பெற்றது. கூட்டுறவுத் துறையின்மூலம் தமிழகம் முழுவதும் 56 பெட்ரோல், டீசல் நிரப்பும் நிலையங்களும், 380 மருந்தகங்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய விவரங்கள்**

கூட்டுறவு வங்கிப்பணி என்பது பெரும் வணிகர்களின் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல் அடித்தட்டு மக்கள், விவசாயிகள், சிறு வணிகர்கள், நடைபாதை வியாபாரிகள், விதவை தாய்மார்கள், மாணவர்கள் வெகுவாக பயன்பெறும் முறையே இந்த வங்கிப் பணியின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

18 தலைமைச் சங்கங்கள், 237 மத்திய சங்கங்கள் மற்றும் 20,871 தொடக்கச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின்கீழ் துடிப்புடன் இத்துறை செயல்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின்கீழ் இத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் தற்போது, மொத்தம் 7,655 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு வங்கிகளிலும், நிறுவனங்களிலும் இதுவரை இல்லாத அளவு பொதுமக்களின் வைப்பு நிதி அதிகரித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 2023-24 ஆம் ஆண்டில் ரூ.72,495/ கோடி அளவிற்கு வைப்பு நிதி திரட்டப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தாண்டு வைப்பு நிதி திரட்ட ரூ. 1 இலட்சம் கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வழங்கப்படும் கடனின் அளவும் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இது பொதுமக்கள் கூட்டுறவுத் துறையின் மீது வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

**அ) பயிர்க் கடன்**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலனை தன் நலமாக கருதும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றில் முதல் முறையாக பயிர்க் கடன் அளவு ஆண்டுக்கு ரூ.10,000 கோடியை தாண்டியது என்றால் அது நமது முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆட்சிக் காலத்திலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, 2021-22 ஆம் ஆண்டில் 14 இலட்சத்து 84 ஆயிரத்து 52 விவசாயிகளுக்கு ரூ.10,292/ கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் அதே பயிர்க்கடன் வழங்க ரூ.12,000/- கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. (குறுக்கீடு) அவ்வாண்டில் 17 இலட்சத்து 43 ஆயிரத்து 874 விவசாயிகளுக்கு ரூ.13,443/ கோடி பயிர்க் கடன் இலக்கையும் தாண்டி வழங்கப்பட்டிருக்கிறது.

2023-2024 ஆம் ஆண்டில் 18 இலட்சத்து 37 ஆயிரத்து 115 விவசாயிகளுக்கு ரூ.15,545/- கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிர்க் கடன் பெற்ற மொத்த விவசாயிகளில், சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை மட்டும் 15 இலட்சத்து 38 ஆயிரத்து 168 ஆகும். இது 83.72 சதவிகிதம் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது ஆகும். சிறு குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த பயிர்க் கடன் தொகை ரூ.12,550/- கோடி ஆகும். இது மொத்த பயிர்க் கடனில், 80.73 சதவிகிதம் ஆகும். ஆக சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கியதிலும், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு குறிப்பிடத்தக்க சாதனையை புரிந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டெல்டா மாவட்ட பயிர்க்கடன்**

அதேபோன்று டெல்டா மாவட்டங்களில் உள்ள 697 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்மூலம், கடந்த ஆண்டு 2021-2022ல் 2,48,869 விவசாயிகளுக்கு ரூ.1,359/- கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. பிறகு, 2022-2023 ஆம் ஆண்டில் 2,81,945 விவசாயிகளுக்கு ரூ.1,832/ கோடியாகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் 3,43,210 விவசாயிகளுக்கு ரூ.3,423/ கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2011-2012 முதல் 2020-2021 மே வரை 10 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 1 கோடியே 6 இலட்சத்து 98 ஆயிரத்து 482 ஆகும். ஆண்டு சராசரியாக 10 இலட்சத்து 69 ஆயிரத்து 848 பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. கடந்த ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களின் தொகை ரூ.60,646/- கோடி ஆகும். ஆக, ஆண்டு சராசரியாக 10 ஆண்டுகளுக்கான கணக்கினைப் பார்த்தால், ரூ.6,064/- கோடி மட்டுமே பயிர்க் கடன் வழங்கப்பட்டது.

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் 31.3.2024 வரை 36 மாதங்களில் 50 இலட்சத்து 65 ஆயிரத்து 41 விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆண்டு சராசரியாக 16 இலட்சத்து 88 ஆயிரத்து 347 ஆகும். இது கடந்த ஆட்சியை விட 70 சதவிகிதத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் 31.3.2024 வரை 36 மாதங்களில் ரூ.39,270/- கோடி பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. ஆண்டு சராசரியாக ரூ.13,090/- கோடி ஆகும். இது கடந்த ஆட்சியைவிட 100 சதவிகிதத்திற்கும் அதிகமாகும் என்பதையும் நான் இங்கு பெருமையுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**உழவர் கடன் அட்டை திட்டம்**

தற்போது உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இதுவரை விவசாய கடன்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் நிலையில், 2021-2022 ஆம் ஆண்டு முதல் கால்நடை பராமரிப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கான நடைமுறை மூலதனக் கடன் வழங்குவதும் உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

உழவர்களின் உழவுப்பணிக்கு குறைந்த வாடகையில் இயந்திரங்கள் கிடைக்கும் வகையில் ரூ.99.48 கோடி மதிப்பில் 2603 எண்ணிக்கையிலான வேளாண் இயந்திரங்கள் கூட்டுறவுத்துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வேளாண்மைப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆ) கால்நடை வளர்ப்புக் கடன்**

கூட்டுறவுத் துறையில் முதன்முறையாக ஆடு, மாடு, கோழி மற்றும் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு, வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி 2022-2023 ஆம் ஆண்டில் 2,86,846 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.1,339/ கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் 4,52,925 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.2,407/கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடம் வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. இந்தக் கடன் விவசாயிகள் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**இ) கணவனை இழந்த கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்**

கணவனை இழந்த கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் தங்கள் சொந்த காலிலேயே வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக, அவர்களது நலனை கருத்தில்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசால் கடந்த ஆண்டு ஒரு புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டு, அவர்களுக்கு 5 சதவிகிதம் என்கிற மிகக்குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது 2023-2024 ஆண்டில் 5,843 எண்ணிக்கையில் ரூ.23.23 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**ஈ) மகளிர் சுய உதவிக் குழுக் கடன்**

மகளிர் தங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காகவும், அடித்தட்டிலிருந்து பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம். இன்று இந்திய அளவில் எல்லோரும் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மகளிர் சுய உதவிக் குழு திட்டத்தை 2006-2011 கால கட்டத்தில் இன்றைய நமது முதல்வர் அவர்கள், அன்றைய துணை முதல்வராக தனது பொறுப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி மெருகூட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அரசு அமைந்தபின் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படும் கடன் உச்சவரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்வாயிலாக அடித்தட்டில் இருக்கக் கூடிய மக்களுக்கும் பலன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆண்டு வரை 1,45,452 குழுக்களுக்கு ரூ.7,564/- கோடியில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி**

தேர்தல் அறிவிப்புகளை நிறைவேற்றுவதில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மேலும் ஒரு சாதனை படைத்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் கோவிட் 19 பெருந்தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு கடனை திருப்பி செலுத்த இயலாத 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 மகளிர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,756/ கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**உ) மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கடன்**

தமிழ்நாடு கூட்டுறவுத் துறை மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதில் தொடர்ந்து இந்தியாவில் முதலிடத்தில் வகித்து வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் அவர்கள் வாழ்க்கையை மேற்கொள்ளவும், அவர்களின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை உயர்த்தும் வகையில் நடப்பாண்டில் 12,874 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.62.21/-கோடிகடன்வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய நகரங்களில் ‘பசுமைப் பண்ணை காய்கறி அங்காடிகள்’

தொடர்ச்சி 12-ஆம் பக்கம்